**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.311/2022**
**வழக்கு சாட்சி PW.2**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வராஜ் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : சின்னநாச்சிமுத்து | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : கோடல்வாவி | வயது | : சுமார் 60 |
| தாலுக்கா | : திண்டுக்கல் | நாள் | : 21.11.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**2-ம் பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை கிடைக்கப்பெறவில்லை என்றால் ? சரிதான். ஆனந்தவேல் அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்க முன்னிலையாகியுள்ளேன் என்றால் ? சரிதான். என்ன வழக்கினை யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ? ஆனந்தவேல் என்பவர் சிவகாமி என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். பணத்தினை வாங்கி கொண்டு கொடுக்கவில்லை என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். ஆனந்த வேல் எனக்கு நண்பரா அல்லது உறவினரா என்றால் ? நண்பர் ஆகும். என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் ? விவசாயம் செய்து வருகிறேன். முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் ? நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. பிரதிவாதிகள் என்ன செலவிற்காக கடன் வாங்கியுள்ளார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் ? குடும்ப செலவிற்காகவும், விவசாய செலவிற்காகவும், சில்லறைகடனுக்காவும் தான் கடன் வாங்கியதாக சொல்லியுள்ளேன். இந்த விபரம் தான் கடனுறுதிசீட்டில் உள்ளதா என்றால் ? ஆமாம். கடனுறுதிசீட்டில் யார் யாரெல்லாம் கையெழுத்து போட்டோம் என்றால் ? எழுதியதும் சாட்சியும் என்ற இடத்தில் செல்வராஜ் ஆகிய

நான் கையொப்பம் செய்தேன். சுப்பிரமணி என்பவர் சாட்சியாக கையொப்பம் போட்டார். பணம் வாங்கிய சுப்பிரமணியும் கடனுறுதிசீட்டில் கையொப்பம் போட்டார். நான் சொல்லியுள்ளது போல் தாவா கடனுறுதிசீட்டில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும் வாதியின் உறவினர் என்பதால் நான் கடனுறுதிசீட்டில் கையொப்பம் செய்துகொடுத்ததை வாதியே நிரப்பிக் கொண்டார் என்றால் ? சரியல்ல. நான் சொல்வதை போல் கடனுறுதிசீட்டு சரியாக எழுதியிருக்கும்பட்சத்தில் சரியாக சாட்சியம் அளித்திருப்பேன் என்றாலும், மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட கடனுறுதிசீட்டில் கையொப்பம் செய்து வாதிக்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. நான் அளித்துள்ள சாட்சியம் ஏற்புடையது அல்ல என்றால் ? சரியல்ல.

**3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

சுப்பிரமணி என்பவர் கடனுறுதிசீட்டில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், ஆனந்தவேல் என்பவருக்காக நானும், ஆனந்தவேலும் சேர்ந்து பொய்யாக உற்பத்தி செய்து வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் ? சரியல்ல. இறந்துபோன சுப்பிரமணி நல்ல நிலையில் இருந்ததால் எவ்வித தொகையும் வாதியிடம் கடனாக பெறவேண்டிய அவசியம் இல்லை என்றால் ? சரியல்ல. 3, 4 பிரதிவாதிகளின் நலனுக்காக இறந்துபோன சுப்பிரமணி கடன் பெறாத நிலையில் இவ்வழக்கு 3, 4 பிரதிவாதிகளை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.11.21 18:09:42 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.311/2022**
**வழக்கு சாட்சி PW.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஆனந்தவேல் | தொழில் | : விவசாயம் மற்றும் தனியார் பிளாஸ்டிக் வியாபாரம் |
| தகப்பனார் பெயர் | : தங்கவேல் | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : ஒட்டன்சத்திரம் | வயது | : சுமார் 43 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 21.11.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**2-ம் பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? பணத்தை வாங்கி கொண்டு எனக்கு பணத்தை திரும்ப கொடுக்காததால் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பத்திரிக்கை நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது என்றால் ? சரிதான். நான் என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் ? வியாபாரம் செய்து வருகிறேன். என்ன வியாபாரம் என்றால் ? பிளாஸ்டிக் கம்பெனி வைத்துள்ளேன். விவாசயம் செய்து வருகிறேன் மற்றும் பேருந்து வைத்துள்ளேன். எனது பேருந்தானது திண்டுக்கல் டு நிலக்கோட்டை பேருந்து ஆகும். N.K.T. பேருந்து என்றால் ? சரிதான். நான் வருமான வரி செலுத்தி வரும் நபர் என்றால் ? சரிதான். நான் கடைசியாக எப்போது வருமான வரி செலுத்தினேன் என்றால் ? இந்த வருடம் செலுத்தினேன். எனக்கு என்னென்ன வருமானங்கள் வருகிறது என்பதை நான் குறிப்பிட்டு தான் வருமான வரி கணக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரிதான். Income Tax படிவத்தில் கடன் பொறுப்பு என்ற காலத்தில் யார் யாருக்கெல்லாம் கடன் கொடுத்துள்ளோமோ அந்த விபரங்கள் எல்லாம்

குறிப்பிடப்பட்டு இருக்கும் என்றால் ? கடன் கொடுத்த விபரங்கள் குறிப்பிடவில்லை. இறந்துபோன சுப்பிரமணி என்பவரை எப்படி தெரியும் என்றால் ? இறந்துபோன சுப்பிரமணி என்பவர் பஸ் வைத்திருந்தார். அந்த பஸ்ஸின் பெயர் A.P.S என்றால் ,? சரிதான். அந்த பஸ் ஒட்டன்சத்திரத்தில் இருந்து சென்னைக்கும், சென்னையில் இருந்து ஒட்டன்சத்திரத்திற்கும் டிராவல்ஸ் பஸ்ஸாக இயங்கி வருகிறது என்றால் ? சரிதான். இறந்துபோன சுப்பிரமணி என்பவருக்கு ஒட்டன்சத்திரம் டவுனில் வீடு மற்றும் பலக்கனூத்து கிராமத்தில் விவசாய பூமியும், கேதையுறும்பு கிராமத்தில் சொத்து உள்ளது என்றால் ? சரிதான். K.K.நகரில் இருந்த சொத்தினை விற்பனை செய்துவிட்டார்கள். நான் ஈரோட்டில் எங்கு வசித்து வருகிறேன் என்றால் ? ஈரோட்டில் உள்ள திண்டலில் குடும்பத்துடன் 8 மாதகாலமாக வசித்து வருகிறேன். சுப்பிரமணி என்பவர் கொரோனா பெருந்தொற்று காரணமாக சிகிச்சை பலனின்றி கடந்த 23.05.2021ம் தேதி இறந்துவிட்டார் என்றால் ? சரிதான். மற்ற பிரதிவாதிகளுக்கும் கொரோனா பெருந்தொற்று ஏற்பட்டு தனிமைப்படுத்தப்பட்டனர் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. எப்போது என்னிடம் கடன் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் ? 01.03.2020ம் தேதி என்னிடம் கடன் வாங்கியதாக சொல்லியுள்ளேன். அந்த சமயத்தில் கொரோனா பெருந்தொற்றால் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருந்தது என்றால் ? சரியல்ல. என்னிடம் சுப்பிரமணி என்பவர் கடன் பெற்றதாக சொல்லப்படும் நாள் முதல் அவர் இறந்துபோன நாள் வரை அறிவிப்பு ஏதேனும் நான் கொடுத்துள்ளேனா என்றால் ? இல்லை. சுப்பிரமணி இறந்த பிறகு பிரதிவாதிகளுக்கு வழக்குரைஞர் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் ? சரிதான். 2-ம் பிரதிவாதி சிவகாமி மற்றும் அவருடைய மைனர் குழந்தைகளான மைனர் சனோ, மைனர் அகில் என்று குறிப்பிட்டு தான் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் ? சரிதான். 1-ம் பிரதிவாதிக்கு வழக்குரைஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் ? அனுப்பியுள்ளேன். நான்சொல்வது தவறு

என்றாலும், 1–ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கை தாக்கல் செய்த போது 3மற்றும் 4 பிரதிவாதிகள் பெயரை மாற்றி சனுசா, நித்திலன் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரிதான். அறிவிப்பு அனுப்பப்படாமல் 1ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? ஆமாம். நான் அனுப்பிய அறிவிப்பில் இறந்துபோன சுப்பிரமணி எப்போது எங்கு வைத்து என்னிடம் சுப்பிரமணி என்பவர் பணம் பெற்றார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ? தேதியை சொல்லியுள்ளேன். கடனுறுதிசீட்டில் யார் யாரை சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் ? பழனிச்சாமி என்பவர் தான் சாட்சியாக கையொபப்பம் செய்துள்ளார். எழுதியதும் சாட்சியுமான செல்வராஜ் என்பவர் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நான் தாக்கல் செய்துள்ள தாவா கடனுறுதிசீட்டு என்றால் ? சரிதான். சாட்சி என்ற இடத்தில் சுப்பிரமணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ? ஆமாம். கடனுறுதிசீட்டில் சுப்பிரமணி என்ற இடத்தில் உள்ள மையும், கடனுறுதிசீட்டில் வாசகங்கள் எழுதப்பட்ட மையும், வேறுபட்டுள்ளது என்றால் ? ஆமாம். சாட்சிகள் இருவரும் எனக்கு உறவினர்களா அல்லது பழக்கமானவர்களா என்றால் ? எனக்கு தெரிந்தவர்கள். தாவா கடனுறுதிசீட்டில் சொல்லியுள்ளவாறு இறந்துபோன சுப்பிரமணி தாவா தேதியில் என்னிடம் கடன் எதுவும் பெறவில்லை என்றால் ? சரியல்ல. நான் தாவா கடனுறுதிசீட்டில் சொல்லியுள்ளவாறு இறந்துபோன சுப்பிரமணி கடன் பெற்று கடனுறுதிசீட்டு எழுதிக் கொடுத்திருந்தால் அதில் யார் யார் சாட்சி கையொப்பம் சரியாக செய்திருப்பார்கள் என்று நான் சொல்லியிருப்பேன் என்றால் ? சரியல்ல. தாவா கடனுறுதிசீட்டில் கண்டுள்ள தொகை என்னிடம் பிரதிவாதி வாங்காத காரணத்தினால் தான் சாட்சி என்ற இடத்தில் நான் பழனிச்சாமியம் போட்டுள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ? சரியல்ல. உண்மையிலேயே இறந்துபோன சுப்பிரமணி என்னிடம் கடன் வாங்கியிருக்கும்பட்சத்தில் சரியான முறையில்

சாட்சியின் பெயரை சொல்லியிருப்பேன் என்றாலும், அவ்வாறு பணம் எதுவும் சுப்பிரமணிக்கு கொடுக்காத காரணத்தினால் நான் சாட்சியின் பெயரை கூட சரியாக சொல்லவில்லை என்றால் ? சரியல்ல. 3, 4 பிரதிவாதிகள் மைனர்கள் குழந்தைகள் என்றால் ? சரிதான். தாவா கடனுறுதிசீட்டு எழுதியதாக சொல்லிய தேதியில் 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு சுமார் 2 அல்லது 3 வயதையுடைய குழந்தைகள் என்றால் ? சரிதான். தாவா கடனுறுதிசீட்டில் கண்டுள்ள தொகையினை இறந்துபோன சுப்பிரமணி 3 மற்றும் 4 பிரதிவாதிகளின் நலனுக்காவும், குடும்ப நலனுக்காவும், பெறவில்லை என்றால் ? சரியல்ல. தாராபுரம் வட்டம், சந்திரசேகரன் மகன் தீபகராஜ் என்பவர் எனக்கு உறவினரா என்றால் ? ஆமாம். உறவினர் தான். இறந்துபோன சுப்பிரமணி என்பவர் நல்ல முறையில் A.P.S டிராவல்ஸ் நிறுவனத்தை நடத்தி வந்தும், வீட்டினை வாடகைக்கு விட்டதன் வழியாக நிறைய வருமானம் உள்ள நிலையிலும், விவசாய சொத்துக்களின் வழியாக வருமானம் வந்திருந்து நல்ல நிலையில் இருந்துள்ள நிலையில் என்னிடம் கடன் வாங்கவேண்டிய அவசியம் இறந்துபோன சுப்பிரமணிக்கு ஏற்படவில்லை என்றால் ? சரியல்ல. அதேபோல், இறந்துபோன சுப்பிரமணி வருமான வரி தாக்கல் செய்து வந்தார் என்றால் ? எனக்கு அது பற்றி தெரியாது. என்னிடம் இறந்துபோன சுப்பிரமணி கடன் ஏதாவது வாங்கியிருக்கும்பட்சத்தில் அந்த கடன் விபரங்களை வருமான வரி கணக்கில் கொண்டுவந்திருப்பார் என்றாலும், கடன் எதுவும் வாங்காத காரணத்தினால் தான் வருமான வரி கணக்கில் கடன் பெற்ற விபரங்களை சொல்லவில்லை என்றால் ? சரியல்ல. சுப்பிரமணி என்பவர் இறந்த பிறகு எத்தனை நாட்கள் கழித்து நான் பிரதிவாதிகளை அணுகி நேரில் சென்று தொகையினை திரும்ப கேட்டேன் என்றால் ? சுமார் 2, 3 மாதங்கள் கழித்து கேட்டேன். பிரதிவாதிகள் என்ன சொன்னார்கள் என்றால் ? பணத்தினை தந்துவிடுவதாக சொன்னார்கள். சுப்பிரமணி இறந்தபிறகு பணத்தினை திரும்ப கேட்டும் தராத காரணத்தினால் தான் வழக்குரைஞர் அறிவிப்பு அனுப்பினேன்

என்றால் ? ஆமாம். கொரோனா பெருந்தொற்று காலத்தில் ஒருவர் இறந்துவிட்டால் மாதக்கணக்கில் மற்றவர்கள் தங்களை தனிமைப்படுத்தி கொள்வார்கள் என்றாலும், அவ்வாறு பிரதிவாதிகள் தனிமைப்படுத்திய காலத்தில் நான் பிரதிவாதிகளை அணுகி கடன் தொகை செலுத்தும்படி கேட்டதாக சொல்வது பொய் என்று சொன்னால் ? சரியல்ல. நான்சொல்வதை போல் பிரதிவாதிகளை அணுகி சுப்பிரமணி என்னிடம் கடன் பெற்றதாகவோ அந்த பணத்தை நான் திரும்ப செலுத்தும்படி திரும்ப கேட்கவில்லை என்றால் ? சரியல்ல. வழக்குரைஞர் வழியாக அறிவிப்பு அனுப்பிய பிறகு தான் பிரதிவாதிகளுக்கு இந்த விபரம் தெரியும் என்றால் ? சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு தான் நான் அனுப்பிய அறிவிப்பு என்றால் ? சரிதான். நான் அனுப்பிய அறிவிப்பில் 21.06.2021ம் தேதி என்று தேதி குறிப்பிட்டு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். சுப்பிரமணி இறந்த தேதி 23.05.2021ம் தேதி என்றால் ? சரிதான். சுப்பிரமணி இறந்து ஒரு மாதத்திற்குள்ளாகவே அவரது வாரிசுகளுக்கு அனுப்பியுள்ளேன் என்றால் ? இல்லை. இறந்த பிறகு ஒரு வருடம் கழித்து தான் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. நான் சொல்லியுள்ள தாவா கடன் தொகை எதையும் இறந்துபோன சுப்பிரமணி கடனாக பெறவில்லை என்பதால் தான் நான் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. பொய்யான காரணங்களை கூறி நான் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் ? சரியல்ல. பிரதிவாதிகள் தாவா தொகையினை செலுத்த கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.11.21 18:09:50 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்